செ.வெ.எண்.410/2021 நாள்.24.09.2021

# திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் மஸ்ருல்உலும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஊரக உள்ளாட்சி தேர்தல் மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியவுள்ள வாக்கு சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் மஸ்ருல்உலும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஊரக உள்ளாட்சி தேர்தல் மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியவுள்ள வாக்கு சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 6 ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 4 ஊரக பதவிகளுக்கு தேர்தல் நடைப்பெறவுள்ளது. உள்ளாட்சி தேர்தலில் மாவட்டத்தில் உள்ள வாக்குசாவடிகளில் பணிபுரியும் வாக்குசாவடி அலுவலர் நிலை1 முதல் நிலை 6 வரை பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அலுவலர்களில் ஆண் பெண் இருவரும் ஈடுப்படுத்தப்படவுள்ளனர். திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1582 அலுவலர்களும், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு 1939 அலுவலர்களும், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்கு 1145 அலுவலர்களும், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1293 அலுவலர்களும், கந்திலி ஊராட்சி ஒன்றியத்திற்கு 1645 அலுவலர்களும் மற்றும் மாதனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1628 அலுவலர்களும் என மொத்தம் 9432 வாக்குசாவடி அலுவலர்கள் தேர்தல் வாக்குபதிவு பணியில் ஈடுப்படுத்தபடவுள்ளவர்களுக்கு இன்று பயிற்சி வகுப்பு 6 வட்டாரங்களில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி ஊரக உள்ளாட்சி தேர்தல்-2021 வாக்குசாவடி தலைமை அலுவலர்களின் கடமை, பொறுப்பு, அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் வாக்குசாவடி அலுவலர் 1,1ஏ,3,4 மற்றும் 5 ஆகியவர்களின் பணிகள் மற்றும் வாக்குபதிவு முடிவுற்றபின் மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணிகளை சரியாக மேற்கொள்ள வேண்டும். மேலும் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகிராம ஊராட்சிகளில் பணிபுரியவுள்ள வாக்குசாவடி மைய அலுவலர்கள் செல்ல தேர்தல் அலுவலர்கள் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நாம் அனைவரும் சமூக இடைவெளியை கடைபிடித்தும், முகக்கவசம் அணிவது மற்றும் கிருமிநாசினி அல்லது சோப்பு பயன்படுத்தி அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல் போன்ற கொரோனா முன்தடுப்பு பணிகளை அவசியம் பின்பற்றி இந்த ஊரக உள்ளாட்சி தேர்தல்களை நடத்த வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர் திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி இஸ்லாமியர் கல்லூரியில் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றிய ஒன்றியத்தில் பணிபுரியவுள்ள வாக்குசாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இப்பயிற்சி வகுப்புகளில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்திரி சுப்பிரமணியன், வட்டாட்சியர் திரு.அனந்தகிருஷ்ணன், தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.துரை, திரு.சிவகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**